Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 27-10-1945 ஐப்பசி மீ 11உ } மலர் 3

# பம்பாய்போல் திராவிட நாடு கொந்தளிக்கப் போகிறது!

## சட்டசபைத் தேர்தல் தன்மையின் வண்டவாளம்

## நம்முடைய கொள்கைகளும் திட்டங்களும் பாமர மக்கள் சிந்தனைக்கு ஆட்பட்டவைகள்!

## சென்னையில் பெரியார் ஈ. வெ. ரா. வீரமுழக்கம்

திருச்சி மாநாட்டுக்குப் பின் 11-10-45 தேதி மாலை சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்திலும், மற்றும் திருச்சி முதலிய இடங்களிலும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சட்டசபைத் தேர்தலின் யோக்கியதையைப் பற்றிப் பேசியது.

செயின்ட் மேரீஸ் மண்டபத்திலும் வெளியிலும் சுமார் 5000 மக்கள் குழுமி இருந்தனர். ஒலிபெருக்கி வைக்கப்பட்டிருந்தது.

தோழர் அண்ணாதுரை எம், ஏ. அவர்களைத் தலைமை வகிக்க தோழர் ஷண்முகசுந்தரசாமி பி. ஏ., பி. எல்., பிரேரேபித்தார், அன்பழகன் ஆமோதித்தார். பட்டம் பதவிவேட்டை S. I. L. F. கட்சி முதல்காங்கரஸ், கம்யூனிஸ்ட், லீக், இந்து மகாசபை, தேசிய......முதலிய எல்லா கட்சியார்களும், பல பெண்களும், சில அதிகாரிகளும் வந்திருந்தார்கள்.

சி. ஐ. டி. ரிபோர்டர்கள் உட்பட பத்திரிகை நிருபர்களும் அநேகமாக இருந்தார்கள்.

தோழர் அண்ணாதுரை அவர்கள் திருச்சி மாநாட்டு தீர்மானங்களை விளக்கிவிட்டு சட்டசபை தேர்தலை இப்போது பகிஷ்கரிக்கவேண்டியது [illegible] [illegible]

### பெரியார்

பிறகு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசினார். அதன் தொகுப்பாவது.

### நமது கட்சி

தலைவரவர்களே! தோழர்களே!

திருச்சி மாநாட்டிற்குப் பின் இங்கு முதல்முதல் கூடி இருக்கிறோம். திருச்சி மாநாடானது உண்மையில் யாருக்காக நமது இயக்கமும், கழகமும் இருக்கிறதோ அவர்கள் கைக்கு இயக்கமும், கழகமும், மாநாடும் முழு சுதந்திரத்துடன் வந்துவிட்டது என்பதைக் காட்டிவிட்டது என்றே சொல்லலாம்.

நம் பெயர்களைச் சொல்லிக்கொண்டு வேறு பலரும் S.I.L.F. கட்சி என்றும், பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும், திராவிடயன் லீக்என்றும், திராவிடயன் பார்லிமெண்டரி போர்ட் என்றும், தென் இந்தியர்என்றும் பல பெயர்களைச் சொல்லிக்கொண்டு இரகசியமாகவும், போலீஸ் காவலுடனும், பட்டாங்கமாகவும் மாநாடுகளைக் கூட்டினார்கள். ஆனால் அங்கு சென்றவர்கள் யார்? சர்கள்; திவான்-ராவ் பகதூர்கள், சாஹேப்கள் இவர்களைக் கொண்டு கடைந்தெடுத்த சுயநலப் பத்தர்கள் [illegible] [illegible]

சிரிப்புக்கு இடமான தன்மையில் முடிவு பெற்றும் பெறாமலும் நடந்திருக்கும். [illegible] சில மாநாடுகளோ கமிட்டிகளோ [illegible] கூட்டங்களோ நடை பெறாமலேயே அசரீரியால் கேள்விப்பட்டு பத்திரிகையாளர்களின் தயவால் வெளியாக்கப்பட்டதாக 'நடைபெற்றி'ருக்கும்.

திருச்சி கூட்டம் அப்படி இல்லை என்பதோடு சர்களோ ராவு பகதூர்களோ பணமூட்டைகளோ சுயநலப்பட்டம் பதவி பித்தர்களோ ஆனவர்கள் இல்லாமல் உண்மையான திராவிட மக்களாகவே ஆண் பெண்கள் உள்பட நாற்பது ஐம்பது ஆயிரம் மக்களாக வந்து கூடி இருந்தார்கள்.

மதப் பிரசாரமோ, சாமிபிரசாரமோ, புராண ஆபாசக் கதை பண்டிகை உற்சவமோ, காரியமோ சிறிதும் இல்லாமல் பட்டம் பதவி கூடாது தேர்தலில் நிற்கக் கூடாதுஎன்பதோடு, மதம், சாமிகள், பூதம், உற்சவம், புராணம், புண்ணியச் சரித்திரம் முதலியவைகளைக் கண்டித்தும் வெறுத்தும், சிலவற்றை இழித்துக் கூறியும் அதற்கு ஆகவே மாநாடு கூட்டுவதாகப் பிரசாரம் செய்து விளம்பரம் செய்திருந்தும் நாற்பதுஆயிரம்ஐம்பதாயிரம் மக்கள் வந்து கூடினார்கள்—என்றால் இடமில்லாமல், சோறில்லாமல், மழையில் நனைந்து மண்ணில் புரண்டு கொண்டு பெண்டு பிள்ளைகளுடன் வெகு கஷ்டத்தோடு 3-நாள் 4-நாள் திருச்சியில் வசித்தார்கள் என்றால் இந்தக் கூட்டத்தை மாமாங்கக் கூட்டம் என்றோ பெரியபாளையத்தம்மன் பண்டிகை கூட்டம் என்றோ பீபிள்ஸ் பார்க்குக் கூட்டம் என்றோ எந்த அறிவிலிதான் சொல்ல முடியும்?

ஆகவேதான் ஜஸ்டிஸ் கட்சி எந்த மக்களுக்கு ஆக என்று துவக்கப்பட்டதோ அந்தக் கட்சி அந்த மக்களின் உண்மையான பெயரின் மீது அந்த மக்களுடைய கைக்கே வந்ததோடு, அந்தமக்களைப்பயன் படுத்திச் சுரண்டிக் கொண்டும் பயன் பெற்றுக் கொண்டும் வந்த சுயநலக் கூட்டம் துரத்தப்பட்டும் விட்டது.

இந்தத் தன்மையில் இன்று நமது நிலை, நமது பொறுப்பு ஆகியவை மிகக் கஷ்டமானது, நமக்கும்பலஎதிரிகள் இருக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கிறார்கள். அதிலும் இன்று அரசியல் சமுதாய மத இயல் கட்சிகள், ஸ்தாபனங்கள் என்பவைகள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டும் தனக்குள்ளாகவே பிளவுகள் செய்து போராடிக்கொண்டும் இருக்கின்றன. வசவுகளும் அடிதடி பலாத்காரங்களும் இல்லாமல் எந்தக்கட்சி வேலையும் நடக்க முடியாத நிலைமையை அடைந்துவிட்டதான இந்த நிலையில் புரட்சிகரமான கொள்கை கொண்ட நாம் வேலை செய்வது என்பது மிகவும் கஷ்டமானதும், அபாயகரமானதுமான காரியம் ஆகும் அல்லவா?

## நம் கொள்கை

ஏன்எனில் நமது கட்சி இன்று ஒரு அலாதியான தன்மை கொண்டதாகும்.

நம் கட்சியைப் போன்ற மற்றொரு கட்சி இந்தியாவிலேயே இல்லை என்று சொல்லலாம்.

நம்மைத் தவிர மற்ற எவரும், எந்தக் கட்சியாரும் நம்மை எதிரிகளாகக் கொள்ளத்தக்க நிலையில் இருக்கிறோம்.

உதாரணமாக நாம்ஒரு கட்சியார்தான் இன்று தேர்தலை பகிஷ்கரிக்கிறோம். தேர்தலில் கலந்துகொள்ளாதே என்கிறோம். நாம் ஒரு கட்சியார்தான், சாமிகள், பூதங்கள், கோட்பாடுகள், மதப் பயித்தியங்கள், ஜாதித்தன்மைகள், சாஸ்திரங்கள், புராணங்கள், கடவுள்களின் திருவிளையாடல்கள். இராமாயணம், கீதைகள் ஆகியவைகளை கண்டித்து பேசுகிறோம்.

அனேகத்தை கூடவே கூடாது என்று மறுத்தும், இழித்தும் பேசி பிரசாரம் செய்து மாநாடுகள் கூட்டி, தீர்மானிக்கிறோம்.

இதை இந்த இந்தியாவில் வேறு யார் செய்கிறார்கள். நல்ல ஒரு அரசியலுக்கும், நல்ல ஒரு அறிவு தன்மைக்கும், மக்கள் ஒற்றுமைக்கும், நல்வாழ்வுக்கும் இந்தக் கொள்கைகள் சிறிதாவது அவசியம் என்று எந்த அரசியல் பொருளாதார இயல், சமய சமுதாய இயல் கட்சி யார் கருதுகிறார்கள்?

நாம் ஏன் இப்படிக் கருதுகிறோம் என்றால் நாம் பொறுப்பை உணருகிறோம். நம் மக்களை விழுந்துகிடக்கும் குழியில் இருந்து மேலேற்ற இந்தக் கொள்கைகள் தான் படிக்கட்டு-ஏணி என்று கருதுகிறோம். நாம் இந்த இழி நிலையில் அதாவது ஜாதியில் கீழாய், படிப்பில் தற்குறியாய், செல்வத்தில் தரித்திரர்களாய், தொழிலில் கூலியாய், ஆட்சியில் அடிமையாய் இருப்பதற்கு நம்மிடம் இன்றுள்ள மடமையும் மடமைக்கு ஆதாரமான மதத்தத்துவக்கொள்கை, மத தர்மம், ஜாதி, ஜாதி வகுப்புப்பேதம், கடவுள்கள், கடவுள் கதைகள், கல்வித் தன்மைகள், இவைகள்கொண்ட மக்களின் தேசியம் முதலியவைகளேயாகும். ஆதலால் அடிப்படையாக பயனுள்ளதான ஆக்க வேலைசெய்ய முயற்சிக்கிறோம். இந்த முயற்சிக்கு இதனால் பாதிக்கப்படும் எவரும் நமக்கு எதிரிகளாய்த்தான் இருப்பார்கள். இவர்கள் யாவரும் நமக்கு எதிரிகள் என்றால் இவர்களது கூட்டுறவால் ஆதரவால் ஒப்பந்தத்தால் அரசு செலுத்தி இவர்களுக்குப் பங்களிக்கும் அரசாங்கமும் நமக்கு எதிரியாய் இருப்பதில் அதிசயமென்ன இருக்க முடியும்?

இப்படியெல்லாம் இருந்தும் நாம் நம் முயற்சியில் மேலும்மேலும் ஊக்கமேற்படத்தக்க நிலையில் இருக்கிறோம். நம் கொள்கைகள் திட்டங்கள் எல்லாம் இன்று பாமர மக்கள் சிந்தனைக்கு ஆட்பட்டவைகளாக ஆகி வருகின்றன.

## எதிர்க்கு இடம் கொடுங்கள்

ஆகையால் நாம் நம் பிரசாரத்திற்கு இன்னும் நல்ல வசதி செய்து கொள்ள வேண்டும். நம் பிரசாரத்திற்கு வசதி என்பது எதிரிகள் பிரசாரத்திற்குத் தாராளமாக நாம் இடம் கொடுப்பதே முதலாவதாகும். இன்று நம்மை எதிர்த்துப் பேச எந்தக் கட்சியாருக்கும் இடமும், வசதியும், மேடையும் இல்லாத நிலையில் இருக்கிறோம். உதாரணமாக என்னை ஒருவன் எதிர்க்க வேண்டுமானால் என் மீசை, தாடி, மைத்தடி, பெயர், என்னுடைய கணக்கு வழக்குகளைப் பிறருக்குக் காட்டவில்லை என்பது, நான் சர்வாதிகாரம் செய்கிறேன் என்பது, ஆகியவைகள் பற்றியும் மற்றும் இன்னும் என் சொந்த நிலை பற்றியும் தான் எப்படிப்பட்டவனும் பேச முடியுமே தவிர இந்த 20 வருஷகாலமாக நான் சொல்லி வந்ததைப் பற்றியோ, சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சி ஆகியவற்றின் கொள்கைத் திட்டம் ஆகியவைகளைப் பற்றியோ எதிர்த்துப் பேசி மெய்ப்பிக்க இன்று எவருக்கும் சாக்கோ மேடையோ இல்லாமல் போய்விட்டது.

இந்தத் தன்மை இன்று இந்த நாட்டில் யாருக்கு எந்தக் கட்சிக்கு இருக்கிறது சொல்லுங்கள் பார்ப்போம். ஆகையால் நாம் எந்தக் கட்சியாருடனும் வாதுக்கோ வழக்குக்கோ போகவேண்டியதில்லை. நாம் மற்ற கட்சியார் கூட்டத்திற்கு வம்புக்கும் தொல்லைக்கும் போனதாகப் பத்திரிக்கைகளில் சேதி வருகின்றன. அந்தப்படி சேதிவர நாம் இடம் கொடுக்கக் கூடாது. மற்றவர்களுடைய கூட்டங்களுக்குப் போகவேண்டுமென்றோ போக வேண்டாமென்றோ நான் சொல்ல வரவில்லை. போனால் இஷ்டமுள்ள வரை இருந்துவிட்டு வந்துவிட வேண்டியது தான்.

## கேள்வி கேட்காதீர்கள்

கேள்வி கேட்பதுகூட சரி இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம். நம் கேள்விகள் அவர்களுக்குப் புரியாது புரிந்தாலும் பதில் சொல்ல முடியாது. முடிந்தாலும் பதில் சொல்ல மாட்டார்கள். ஆதலால் நாம் கேள்வி கேட்பதை அவர்கள் "கலகம்" "குழப்பம்" என்று பேர் வைத்து கலைத்துவிட்டுப் போகவே தந்திரம் செய்வார்கள். பத்திரிகைக்காரர்களும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆனதால் நம்மால் கலகம் நடந்ததாக எழுதிவிடுவார்கள். இதனால் அவர்கள் தங்கள் பலக்குறைவில் இருந்தும் அவர்களது கொள்கையும் நாணயமும் அற்ற திட்டங்களை மக்கள் தெரிந்துகொள்ளுவதிலிருந்தும் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். என்னைப்பொருத்தவரையாரா வது கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவது வழக்கம். எனக்குத் தெரிந்ததை, என் கருத்தைச் சொல்லிவிடுவேன். கேள்வி கேட்டவர் ஒப்புக்கொள்ளுகிறாரா இல்லையா என்பதைப் பற்றிக் கவலை இல்லை. கேள்வி கேட்பது குற்றமாகாது. சொன்ன பதிலை பதிலாகக் கருதாமல் அதன்மேலும் கேள்வி கேட்பதோ விவகாரம் செய்வதோ நியாயமாகாது என்பதோடு அது ஒழுக்கமுமாகாது யோக்கியமுமாகாது என்பேன். இதுதான் நாகரீகமும் நாணயமும் கொண்ட மக்கள் கூட்டத்தின் நடப்புமுறையாகும்.

கலகம் ஏற்பட்டால் ஒரு கை பார்க்கவேண்டும். தலை கொடுக்க வேண்டும். அதுதான் சுயமரியாதைக்காரன் கடமை. ஆனால் கலகம் செய்வதும் கலகம் ஏற்படும்படி நடப்பதும் இழிவான காரியமாகும். கூட்டத்தில் ஆர்க்குமெண்டுக்கு ஆகப் பேச வேண்டுமே ஒழிய ஒருமனிதனை ஒருகட்சியை இழித்துக்கூறும் எண்ணத்தோடு பேசக் கூடாது. சிலருக்கு சில தனிப்பட்ட ஆட்களைப் பற்றிப் பேசுவதைத் தவிர கூலிக்காக ஒருவரை ஒருவருக்காக வைவதைத் தவிர வேலையும் இருக்காது விஷயமும் இருக்காது. இப்படிப்பட்டவர்கள் பேசும் கூட்டங்களில் கலவரம் வந்தேதீரும். ஆனாலும் நம்மவர்கள் அதில் சம்மந்தப்படக்கூடாது என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

## கெட்ட பெயருக்குப் பயப்படக்கூடாது

நாம் நம் கொள்கைப்படி காரியம் செய்வதில் நமக்குக் கெட்ட பேர் வருமே என்றுபயப்படக்கூடாதுநாம்கெட்ட காரியம் செய்யத் தலைப்படக்கூடாதே தவிர மற்றவன் என்ன சொல்வான் என்று சிந்திக்கக் கூடாது. நம்மைப் பற்றி மற்றவன் போற்ற வேண்டுமென்றும் கருதக்கூடாது. கசப்பான மருந்து கொடுப்பதும் நோவான ஆயுத சிகிச்சை செய்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

(திராவிடருக்கு இழுக்கு விளைக்கும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லையென ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான தோழர்கள் கையொப்பங்கள் அனுப்பி வருகிறார்கள். இந்த ஆண்டும் அந்தப் பட்டியில் ஆயிரக்கணக்கான தோழர்களும், தாய்மார்களும், மாணவர்களும் சேர்ந்துள்ளனர். குடும்பத்தோடு கொண்டாடுவதில்லையென்றும் பலர் உறுதிமொழி அனுப்பியுள்ளனர். இடமின்மையாலும், பலர் கையெழுத்துக்கள் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாலும் சுமார் ஆயிரம் தோழர்களின் பெயர்கள் மட்டுமே இந்த வாரம் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள், இவர்கள்!)

**தண்டராம்பட்டு**

சி. இராமச்சந்திரன், V. B. துரைசாமி, பி. முனியப்பா, டபுல்யூ. ஆர். பாலுரெட்டி, டி.கே. தனக்கோடிரெட்டி, ஆர். வி. திருமலைத்திராவிடன், தா. எத்திராசுரெட்டி, ஆர். கோவிந்தசாமி கவுண்டர், த. பாலசந்திரரெட்டி, த. ராமசாமிரெட்டி, அலமேலு-கேசவன், லோகம்-ஜெகநாதன், அக்கம்மா, சென்னம்மாள், அலமேலு, வடிவேல் நயினார், ர. நாமதேவ், தாயார், ரெ. சித்தாரெட்டி.

**தாராபுரம்**

கோ. கோபால், தி. அங்கம்மாள், ப. பாப்பம்மாள், ஜி. ராமானுசம்மாள், க. சங்கர், ந. கருப்புசாமி, என். கோபாலசாமி நாயுடு, எ. கன்னியப்பன், எ. வெங்கடாசலம், வி. கே. விருத்தாசலம், எம். துரை, ஆர். முத்து, வி. கிருஷ்ணன், பி. சீனிவாசன், ஜி. கோவிந்தராசு, எ. சுந்தரம், எம். எஸ். பழனியப்பன், கே. வரதராஜுலு நாயுடு, எஸ். ராமசாமி, எம். உத்தண்டி, வி. பாலகிருஷ்ணன், வி. முத்துக்கிருஷ்ணன்.

**அய்யம்பேட்டை**

ஆர். எஸ். முத்துசாமி, எம். கோவிந்தராசு, கே. எஸ். கோவிந்தராசன், கு. சிதம்பரம், து. ப. திருவேங்கடம், மு. கிருட்டினமூர்த்தி, எம். தங்கராசு, பி.கல்யாணசுந்தரம், க. ராமசாமி, பி. சோமு, அன்பு கிருட்டினசாமி, சுயம்புலிங்கம், பி. சி. சுப்ரமணிய பிள்ளை, எஸ். மீனாட்சிசுந்தரம், எம். குப்புசாமி பிள்ளை, சு. தீனதயாளன், பி. எஸ். சாமிநாதன், பி. எ. சண்முகவேல், ஆர். வெங்கடேசன், ஜி. சிவானந்தம், ஆர். எஸ். கோவிந்தன், எ. ஆர். வெங்கடாசலம், எஸ். ராமய்யன், வி. தருமையன், பி. ஆர். ஆர். சாரி, எஸ். முருகேசன், சுந்தரமூர்த்தி, எஸ். குஞ்சு, வீ. பொன்னையன், கே. எம். முத்து, வி. கோவிந்தன், சு. செந்திருவேலு, பி. சவரிமுத்து, கா. மி. சங்கரபாண்டியன், கே. எஸ். செல்வமணி, வி. சாமிநாதன், ஜி. முத்துகிருஷ்ணன், இ. இளம்பூரணன், ஆர். முத்துசாமி, எம். தட்சணாமூர்த்தி, பி. வேணு, எஸ். ராமச்சந்திரன், ஆர். சம்மந்தம், எம். கே. சமரசபாண்டியன், வி. நன்மாறன், D. ராமய்யன்.

**நாமகிரிப்பேட்டை**

முத்துகிருஷ்ணன், பி. மாணிக்கம், டி. ஏ. ராமலிங்கம், பி. கே. மாரியப்பன், என். சின்னு, எம். சுப்பம்மாள், பட்டம்மாள், கோ. சீனிவாசன், ஆர்.கே. வேணுகோபால், கே. பெரியசாமி, குப்புசாமி பிள்ளை, எம். பி. சி. நடேசன்செட்டி, டி. எ. பெத்தசாமி, தி. பெ. அருணாசலம், பி. சுப்ரமணியம், ஜி. சி. ஒபுளி, ஆர். மாரிசெட்டி, என். சுப்பு (ஆசிரியர்) டி. பழனிசாமி, பி. நமசிவாயம்.

**ஜெனரல் மார்க்கட் (திருச்சி)**

மு. ஆறுமுகம், கோவிந்தராசு, அ. கருப்பண்ணன், பி. நாராயணன், கே. கோவிந்தன், கே. பார்த்தசாரதி, கே. ராமதாஸ், கிருஷ்ணப்பா, பாப்பா—ஆறுமுகம், டி. பி. ராமசாமி, வி. எஸ். கோடன், எம். என். ராமசாமி, கே. பி. கிருஷ்ணன், ஆர். வெங்கடாசலம், ஆர். சந்திரகாசன், சு. கிருஷ்ணசாமி (பொன்மலை), த. தெட்சணாமூர்த்தி (மேலக்கற்கண்டார் கோட்டை), அ. கோவிந்தசாமி, கோ. அமுர்தவல்லி (பொன்மலை), எம். முத்துக்கிருஷ்ணன் பி. ஏ., டி. ராமநாதன்.

**சென்னை**

க. திருமலை, பாவி. ஆனந்தன், லட்சுமணன், கே. வி. சோமசுந்தரம், கு. கோதண்டபாணி, ஆர். வடமலை, மு. பாண்டுரங்கன், மு. செந்தாமரை, மு. ஜெகதீஸ்வரி, எஸ். வரப்பிரபலாட்சி, எஸ். கிருபாகரன், எஸ். சண்முகம், எஸ். தண்டபாணி, வைத்திநாதன்.

**காட்டுப்புத்தூர்**

கா. சா. குழந்தைவேல், ப. ஞா. பச்சமுத்து, ந. பெ. கந்தசாமி, கு. ரெங்கசாமி.

**சேலம்**

எ. கே. அப்பய்யன், பார்வதி.

(துகை)

ஜி. காந்தலட்சமி, ஜி. கோபாலகிருஷ்ணன், ஆர். கோவிந்தராசன், செல்வராசு, இராவணன்.

**சேலம் அம்மாப்பேட்டை**

ஸ்டாலின் ராமசாமி ஜெகநாத செட்டி டி பி வேலாயுதசாமி கிருஷ்ணன் எஸ் எம் அர்த்தநாரி S M பழனிசாமி கே துரைராஜலு எ சித்தன்னா வரதராஜலு கிருஷ்ணசாமி பி கே சுப்பராயலு ராமலிங்கம் S S பழனிசாமி வி ஆர் நாராயணன் பி எல் வீரபாலன் ஜி கிருஷ்ணமூர்த்தி கே கே சாம்பலிங்கம் சி வரதராசன் எம் எ பாலை செட்டி கொ கெ சித்தையன் கே எம் முத்துசாமி பி எ மாணிக்கம் ஓ ஆர் பட்டாபி நஞ்சப்பன் கே பி ரங்கசாமி பெருமாள் கோபாலகிருஷ்ணன் ப பெ பழனிசாமி.

**நா. பேட்டை**

எம். எஸ். என். இராசன், ஐ. சட்டய்யன், என். சின்னப்ப நாயுடு, எஸ். நல்லமுத்து, பி. தர்மலிங்கம், எஸ். அயோத்தி, வி. என். இராசன்.

**நீடாமங்கலம்**

எஸ். சரவணன் பி. ஏ., எஸ். அண்ணாமலை, அ. ஆறுமுகம். ஆர். விசுவநாதன், சி. சண்முகம், ஆர். சுந்திரேசன், பி. எஸ். ரெத்தினசபாபதி, என். கே. ரெத்தினம், என். கதிர்வேலு, சு. நாராயணன், இராதா, எம். வரதராசன். டி. தங்கவேலு, ஜி. கிருஷ்ணசாமி, ஜி. கனகசபை, எஸ். ஆறுமுகம், பி. நடராசன், பி. மகாதேவன், என். சிவசுப்ரமணியன், கே. சோமு, எ. நடனம், கே. நாதகிருஷ்ணன், எஸ். கல்யாணராமன், ஆர். கேசவன், எஸ். மாரிமுத்து, எஸ். சம்மு, என். பண்டரிநாதன், பி. சாரங்கபாணி, டி. வி. இராமசிவம், என். எ. சண்முகம், எஸ். கணேசன், பி. எஸ். வீரன்னா, என். எஸ். கோவிந்தராசலு, மா. தங்கவேலு, ஜி.வெங்கடராமன் பி.ஏ. வி. வெங்கடேசன், எஸ். மாரிமுத்து, என். எஸ். பங்காருசாமி, பி.கன்னையன், ராமதாஸ், என். சண்முகம், ஆர். ருத்ராபதி, வி. இராசகோபாலன், கோ. பெரியசாமி, எ. சிவராமகிருஷ்ணன், பி. மருதப்பா, எஸ். வடிவேலு, எஸ். சாம்பசிவம், வி. பி. வி. எஸ். சந்தானம், கே. சௌந்தரராசன், எஸ். திருஞானம், பி. ராசு, என். ராசகோபால், என். சுந்தரேசன், ஜி. துரைராசு, பாஞ்சோகிருஷ்ணப்பா, கிருஷ்ணமூர்த்தி.

**மாணிக்க மங்கலம்**

வி. சாம்பசிவம், நோ. வீரையன், கே. முத்தையன், கே. சோமசுந்தரம், பி. ஜெகன்னாதன், என். ருத்திராபதி, என். சாம்பசிவம், வி. சுந்தரேசன், என். ராமையன்.

**தாராசுரம்**

எம். எஸ். நாதன் (திருவலஞ்சுழி) எம். எஸ். உலகாம்பாள், சி. அண்ணா

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மலை, மு. சாமிநாதன், என். எஸ். வாசன், எஸ். வி. அம்பிகை, கே. எஸ். நாதன், ஜி. வரதராசன், கே. நாராயணசாமி, ஜே. கிருட்டிணன், எம். முத்துப் பெருமாள், கே. துரை ராசு, வி. கனகசபை, வி. ராசகோபால், வி, குப்புசாமி, வி. ஆர். கிருட்டினன், எஸ். எஸ். வாசன், ராஜம் பி. மருதை யன், எ, கிருட்டிணன், ஜி. என். வாலாம் பாள், என். ஜெகநாதன், டி. ரெட்போவி யன், அ. கோவிந்தராசு, என். கிருட்டி னன், கே. ராசகோபால், ஆர். கோவிந்த ராசன், கே. பாலகிருட்டினன், டி.

மங்கப்பான், ஜி. வீரையன், எம். பூங் காவனம் (திருவலஞ்சுழி( எஸ். ராமதாஸ் (நா. கோயில்) எஸ் குணசீலன், ஜி. ராமானுசம், ஆர். எஸ். பி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். ஆம். ராமசாமி, வி. ஜி. திருவேங்கடம், ஆர். சேதுராமன்; ஜி. கல்யாணசுந்தரம், பி. பாலகிருஷ்ணன், ஜி. வையாபுரி, என். முத்துக்குமரன், சு. ராசமாணிக்கம், மாரியப்பன், D. மங்களம், கிருஷ்ணன்,

**கோயமுத்தூர்**

வி. வேலாசாமி, நடராசன், ஆர். சிவ சுப்ரமணியன், வி. ரங்கராசு, எஸ். ராசு, எம். நடராசன், என். பிள்ளாரி, கே. பொன்னுசாமி, கே. வி. ரத்தினம், எ. பாலசுந்தரம், பி. அருணாசலம், டி. வி. சுந்தரம், சி. ராசகோபால், எம். பட்டி லிங்கம், ஜி. எஸ். பாலசுந்தரம், சி. முத்து, S.பஞ்சநதம், K.வெள்ளியங்கிரி.

**திண்டுக்கல்**

எ ராசு S துரைசாமி நடேசன் S ராசகோபால்.

**சிறுகனூர்**

ரா ரெங்கசாமி மு துரைசாமி S முத்துவெங்கடாசலம் S S மணியன் கே நடராசன் எம் கணபதி S கணபதி பிள்ளை ஆர் முத்து வெங்கடாசலம் வீ ரா ரெங்கசாமி பி கிருஷ்ணமூர்த்தி D விசுவநாத பிள்ளை எ ரெங்கசாமி மு ரெங்கசாமி.

**திருப்பனந்தாள்**

S மகாலிங்கம் எம் செல்வஅரசன்,

(தொடரும்)

---

திராவிடன் பதிப்பகம் வெளியீடு-3

# பகுத்தறிவுப் பாமாலை

பகுத்தறிவுப் பாமாலையைப்பற்றி அடியில் வருமாறு விமர்சனம் வெளியாயிருக்கிறது.

"குடி அரசு" ஈரோடு.

........."சினிமா மெட்டில் சிறுசிறுப் பாடல்களாக தொகுக்கப்பட்டிருப்பது சிறுவர் முதல் முதியோர்வரை எளிதில் கற்று பயன்பெற முடியும் என்று நம்புகின்றோம்.

.........சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப முயலும் தோழர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை."

விற்பனையாளர்கட்குத் தக்க லாபம் தரப்படும்.

குறிப்பு:—எங்களிடம் தலைவர், தளபதி, கவிஞர், அம்பேத்கார், பன்னீர் செல்வம், நெடுஞ்செழியன், சனார்த்தனம், அன்பழகன் முதலியவர்கள் படங்களும் கிடைக்கும். விபரங்கட்கு:-

திராவிடன் பதிப்பகம்; தபாற்பெட்டி 18, வேலூர் வ.ஆ.

---

ஊரேங்கும் இதே பேச்சுத்தான்
மாதம் 30000 பேர் படித்து வருவது

## "வெற்றி"

உயரிய மாத வெளியீடு.

கதை, கட்டுரை, படம், அரசியல் முதலியவை அடங்கியது.

ராஜேஸ்வரி ஆசிரியர், உதவி ஆசிரியராக இருக்கிறார்.

10,000 சந்தாதாரர்கள் தேவை. வருட சந்தா ரூ. 1 தான்.

தனிப்பிரதி ஒருஅணா. மாதிரிக்கு 2அணா ஸ்டாம்புடன் எழுதுங்கள்.

ஏஜண்டுகள் டிப்பாசிட் ரூ.10 அனுப்பி எழுதுக.

கதை, கட்டுரை, செய்திகள் வரவேற்கிறோம்.

விபரம்:

"வெற்றி" ஆபீஸ்,
(K. A.) நாங்குனேரி P. O.

---

பரிசு ரூ.

# 1000

பீடிகளுக்கு அரசன்

## வெற்றிவேல் பீடிகள்


(காரம், மணம் குணமுள்ளது)

24 கட்டு பார்சல் ரூ. 110.
F. O. R. வேண்டுவோர்
ரூ. 50 அட்வான்ஸ் அனுப்புக.

ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள் தேவை.
மாத சம்பளம் ரூ 40.
முன் பணம் ரூ. 100 அனுப்பி
விண்ணப்பிக்க.

தாய்நாடு கார்ப்பரேஷன்
Regd.
"வெற்றி மாளிகை"
நாங்குனேரி P. O.

---



ஜெயராம்

## காயசுத்தி லேகியம்

உண்மையான மருந்து. சக்தி வாய்ந்த மருந்து.
பல நூற்றுக்கணக்கான குடும்பங்களில்
தினம் உபயோகிக்கப்படுவது.
உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிடில்
உடனே எழுதுங்கள்.

குடல், இரைப்பை சம்மந்தமாய் ஏற்படக்கூடிய, வாந்தி, மயக்கம், தலைவலி, தொண்டைப்புண், நெஞ்சுவலி, புளிச்சேப்பம், வயிற்றுப்புசம், வயிற்றுவலி, இடுப்புவலி, குடல்வாதம், கைகால் வலி, மூல நோய் முதலியவைகளை அகற்றி பசியைக் கொடுக்கும் உயிர்த்தோழன். உபயோகிக்கும் முறை மருந்துடன்.

1 சேர் ரூ. 1. ½-சேர் ரூ. 2-0-0. தபால்கூலி தனி.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை!

● ஜெயங்கொண்டத்தில் 28-10-45 ஞாயிறு மாலை பெரியார் பிறந்தினக் கொண்டாட்டம் நடைபெறும். தோழர்கள் ஆ. திராவிடமணி பி. ஏ., மு. கருணாநிதி, வீரமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● விருத்தாசலம் திராவிடர் கழக ஆண்டுவிழா 28-10-45 ஞாயிறு காலை 9மணிக்குத் துவக்கி 6மணிக்குப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சனார்த்தனம், சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 28-10-45 மாலை 6மணிக்கு திருப்பத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல் காம்பவுண்டில் தோழர் ஆர். அருணாசலம் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். ஏ., தோழர் பூ. கணேசன் ஆகியோர் விரிவுரையாற்றுவார்கள்.

● சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்கத்தில் 31-10-45 புதன்கிழமை இரவு 9மணிக்கு "சேலம் மாவட்ட திராவிடர் கழக மாநாடு" நடத்துவதுபற்றி யோசிக்க ஒரு கூட்டம் நடைபெறும். அனைவரும் வருக!

● 28-10-45 ஞாயிறன்று சென்னை இராயபுரம் கல் மண்டபம் சாலை கழகக் கட்டிடத்தில் "வட சென்னை 1-வது திராவிடர் மாநாடு" நடத்துவது பற்றி யோசிக்க ஒரு கூட்டம் நடைபெறும். தோழர்கள் வருக!

● கீடாமங்கலம் முஸ்லிம் லீக் தொடக்க விழா 3-11-45 சனிக்கிழமை மாலை நடைபெறும். தோழர்களான திருச்சி டி. கே. சீனிவாசன், ஏ. கே. பாட்சா, சி. பி. சின்னராசு, எச். எஸ். முகம்மது, எம். ஈம். அப்துல் வகாப் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 3-11-45 இரவு 9½ மணிக்கு மேலக்கற்கண்டார் கோட்டைத் திராவிட நடிகர் கழகத்தாரால் பொன்மலை இன்டியன் இன்ஸ்டிடியூட் கொட்டகையில் தோழர் கே. வி. அழகிரிசாமி தலைமையில் "வறுமையின் கொடுமை" என்ற நாடகம் நடைபெறும்.

● 30-10-45 ல் திருச்சி ஜில்லா திராவிடர் கழக கமிட்டிக் கூட்டம் தென்னூர் பழனிச்சாமி பிள்ளை பங்களாவில் மாலை 6 மணிக்கு கூடும்.

● திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் 29, 30-10-45 திங்கள், செவ்வாய் இரவு 10-30-க்கு திருநாகேஸ்வரம் புத்துலக நாடக சபையாரால் குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் "வருங்கால வீரன்" என்னும், தோழர் ரமணி எழுதிய நாடகம் நடைபெறும்.

● பூவாளூரில் 28-10-45ந் தேதி ஞாயிறு மாலை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு பெரியார் பட ஊர்வலமும், கூட்டமும், 29-10-45 மாலை மணக்காலில் பெரியார் பட ஊர்வலமும் கூட்டமும் நிகழும். தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, டி. பி. வேதாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## காந்தி ஜயந்தி கலாட்டாவில் முடிந்தது!

துறையூர் காந்தி ஜயந்தி விழாவில் ஒரு பார்ப்பனர் நேர்மையற்ற முறையில் தாராளமாகப் பேசிக்கொண்டே போன போது பொறுமையிழந்த சிலர் கேள்விகள் சிலவற்றை அமைதியாக கேட்கவே உளறிய தோழர் ஊமையாகி உட்கார்ந்துவிட்டாராம். கூட்டத்தில் குழப்பமேற்படும் என்று அஞ்சி கூட்டத்தை உடனே முடித்து விட்டனர்.

## உறக்கமா தோழரே!

திராவிடர் கழகத்தின் உறுப்பினர் தொகை 35000த்துடன் நின்றுவிடுவதா? இந்த ஆண்டுக்குள் 50000ஆக வேண்டாமா? ஏன் உறக்கம்? உறக்கமா? ஓய்வு நேரமா? நம்மைநோக்கிப் பெரும் பொறுப்பு வந்துகொண்டிருக்கிறது! எழுங்கள்! ஒவ்வொரு கிளைக் கழகத்தினரும் வேலை தொடங்குங்கள்! உறுப்பினர் சேர்த்து அனுப்புங்கள். திராவிடநாட்டு விடுதலையை நெருங்க முனையுங்கள்!

## தோழர்களுக்கு!

இந்தக் கிழமை இதழில் தீபாவளி கொண்டாடாத தோழர்களின் பெயர்களைப் பொறிக்க வேண்டியது அவசியமாகிவிட்டபடியால் செய்திகள் பல வெளியிட முடியவில்லை. அடுத்த வாரம் அவை வெளியிடப்படும்.

(ஆ. ர்.)

## தொழிலாளர் மித்திரன்

21-10-45-ல் நடைபெற்ற தேர்தலின் காரணமாக வெளிவரத் தாமதப்பட்ட நமது தொழிலாளர் மித்திரன் 3-11-45-ல் வெளி வரும் என்பதை அறிவிக்கிறோம்.

மானேஜர்,
தொழிலாளர் மித்திரன்,
பாண்டிச்சேரி.


வெற்றியடைந்தவுடன்

மே. த. கவர்னரின்

யுத்த நிதியானது "கஷ்ட நிவாரண சகாய நிதி"யாக மாறிவிட்டது.

இந்த மாறுதல் குறிப்பிடத்தக்கதாகவும், தேவை மிக அதிகமாகவும் இருக்கிறது.

எனவே
"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு
"ஹானரரி டிரஷரர், கவர்னர் கஷ்ட நிவாரண சகாய நிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா, சென்னை" என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பிக்கொடுக்கவும்.

குடி அரசு

1945-ஆம் அக்டோபர் மீ 27உ

# தேர்தல் விளக்கம்

அண்மையில் நடைபெற இருக்கும் தேர்தல்கள் பற்றி நம் ஜஸ்டிஸ் கட்சியில் (அதாவது திராவிடர் கழகத்தில்) இருக்கும் முஸ்லிம் தோழர்களும் ஆதிதிராவிடர் (ஷெட்யூல்) வகுப்புத் தோழர்களும் தேர்தல்களில் தாங்கள் எப்படி நடந்துகொள்ளுவது என்று பல இடங்களில் இருந்து விபரம் தெரிய விரும்பி கடிதமெழுதுகிறார்கள். அதை விளக்கவே இத்தலையங்கம் எழுதுகிறோம்.

முஸ்லிம் தோழர்கள் சிலர் நம் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்குமதத்தின்பெயராலும் முஸ்லிம் சமுதாய அரசியலின் பேராலும் முஸ்லிம் லீக் முதலிய பல ஸ்தாபனங்கள் இருப்பதால் அதில் அவர்கள் அங்கத்தினர்களாகவும் இருப்பதால் அவர்கள் (முஸ்லிம்கள்) தேர்தலில் அவரவர்கள் சம்மந்தப்பட்ட ஸ்தாபனங்களின் திட்டப்படி நடப்பதே ஒழுங்கு என்று கருதுகிறோம். இது ஒருபுறமிருந்தாலும் முஸ்லிம்களுக்கு தேர்தல் தொகுதி பிரிக்கப்பட்டு முஸ்லிம்கள் ஓட்டுகளைக் கொண்ட தனித்தொகுதி ஓட்டு முறை இருப்பதால் அவர்கள் (தனித்தொகுதி வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள்) தேர்தலில் கலந்து கொள்ளலாம். மற்றபடி ஏழை மக்கள், தொழிலாளிகள், கல்வி அறிவில்லாத பாமர மக்கள் என்பவர்கள் எதிலும் இருத்திவைக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆதலாலும், பணக்காரனும் படித்தவனும் மூடநம்பிக்கைப் பிரசாரகனும் பாமர மக்களை சுரண்டும் தன்மை நாட்டில் எந்தக் கூட்டத்திலும் இருப்பதாலும், அப்படிப்பட்ட காரியங்கள் ஒழிக்கப்பட அவை சம்மந்தப்பட்ட அளவுக்கு ஜஸ்டிஸ் கட்சியுடன் கலந்து தொண்டாற்றுவதில் தவறு இல்லை என்று கருதுகிறோம்.

ஆதிதிராவிடர் என்னும் ஷெட்யூல் வகுப்பு திராவிட தோழர்கள் இப்போது வரப்போகும் தேர்தலில் கலந்துகொள்ளுவது என்பது சிறிதும் அறிவுடைமையான காரியம் ஆகாது என்றே கருதுகிறோம். பூனா ஒப்பந்தம் கேன்சில் செய்யப்பட்டால் ஒழிய ஷெட்யூல் வகுப்புத் தோழர்கள் ஓட்டர்களாகக்கூட பதிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதோடு அவர்கள் யாருக்குமே ஓட் செய்யக்கூடாது என்பதும் நமது கருத்து ஆகும்.

அவர்களது நிலைமை "ஜாதி திராவிடர்கள்" என்பவர்களைவிட மிக்கப் பரிதாபகரமானதாகும். அவர்களுக்குத் தேர்தலில் தனித்தொகுதி இல்லாமல் 30 ஸ்தானம் கொடுத்திருப்பதானது, அந்த சமுதாயத்தில் அந்தச் சமுதாய நலனுக்கு ஏற்ற யோக்கியப் பொறுப்பும், இன உணர்ச்சியும் அற்றவர்களை உற்பத்தி செய்வதற்கே ஒழிய அந்தச் சமுதாயத்தின் நலனுக்குப் பயன்பட வசதியே கிடையாது என்போம்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மகா புத்திசாலி, நல்லவர், நாணயமானவர், சுயநலம், பட்டம் பதவி பேராசை அற்றவரும் கூட. ஆனால் அவருக்கு இந்த நாட்டு ஆதிதிராவிடர் நிலையும் இங்குள்ள ஆதிதிராவிடத் தலைவர்களின் தன்மையும் சரியாகத் தெரிவதற்கு இதுவரை வழி இல்லாமலே போய்விட்டது. தலைவர்களுக்குள் தனித்தனி உணர்ச்சியும் இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு கட்சியை ஆதரித்தவர்களாகவே இருந்து வந்தவர்களாவார்கள். அந்த சமுதாயப் பெருவாரி மக்களுக்கும் தலைவர்களுக்கும் நெருங்கிய சம்மந்தம் இல்லாமல் ஒவ்வொரு கூட்டத்தாரால் ஒவ்வொரு தலைவர் மதிக்கப்பட வேண்டியவர்களாகிவிட்டார்கள். அச்சமுதாய மக்களுக்குள் பறையர், பள்ளர், வள்ளுவர்கள், சக்கிலிகள் என்பதுபோன்ற பல வகுப்புகள் இருந்துகொண்டு ஒருவருக்கொருவர் நம்பிக்கையோ நட்புமுறையோ இல்லாமல் இருந்து வந்தது. இதை காங்கரஸ்காரர்கள் நன்றாய்ப் பயன்படுத்திக்கொண்டு தேர்தலை தங்களுக்கு அடிமை ஆக்கிக்கொண்டார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஷெடியூல் வகுப்பார்கள் இந்துக்கள் அல்லவென்று சொல்லி வருகிறார். இங்குள்ள ஷெடியூல் வகுப்பார்கள் இந்துக்களாகவே இருக்கிறார்கள். இந்த விவரங்களை அவர்களுக்கு எடுத்துச்சொல்ல சரியான பிரசாரம் இல்லை, சரியான பத்திரிகையுமில்லை. பெருவாரியான நம்பிக்கைபெற்ற தலைவர்களுமில்லை. நல்ல தலைவர்களை நம்பிக்கையோடு பின்பற்றுகிற மக்களும் அரிதாக இருக்கின்றனர். அவர்களுடைய ஓட்டுகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதிலும் தெளிவில்லாமல் இருக்கிறார்கள். தெளிவிருந்தாலும் அந்த வகுப்பு மக்களின் பெரும்பான்மை ஓட்டைக் கொண்டவர் தெரிந்தெடுக்கப்பட முடியாத மாதிரியில் தேர்தல் தொகுதி இருக்கிறது.

இதை அறிந்தே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்த முறை பரீக்ஷார்த்தமாய் 10 வருஷத்திற்கு இருக்கத்தக்கது என்று சொல்லி ஏற்பாடு செய்யச் செய்தார். இப்போது 10 வருஷம் ஆகிவிட்டது.

# வேண்டுகோள்

திருச்சியில் ஜஸ்டிஸ் கட்சி 17-வது மாகாண மாநாட்டில் தேர்தலைப் பஹிஷ்கரித்தும், யாரும் நிற்கக்கூடாது என்றும், ஓட் செய்யக் கூடாது என்றும் தீர்மானித்து இருக்கிறது. தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்றுசொல்லிக்கொண்டு ஒரு சிலர் போலிக் கூட்டம் கூடி ஜஸ்டிஸ் கட்சி தேர்தலுக்கு நிற்க அநுமதிக்கிறதாகச் சொல்லிக்கொண்டு சிலர் தேர்தலுக்கு நிற்கிறார்கள். தேர்தல் செலவுக்கு என்று பணமும் வசூல் செய்கிறார்கள். இது வெறும் பணந்தண்டும் காரியம் என்பதோடு கட்சிக்குக் கேடு செய்யும் காரியமுமாகும். ஆகலால் பார்ப்பனரல்லாத மக்கள் என்று சொல்லப்படும் ஜஸ்டிஸ் கட்சி திராவிட மக்கள் இதற்குப் பணம் கொடுக்கக் கூடாது என்பதோடு, ஜஸ்டிஸ் கட்சி திருச்சி மாநாட்டுத் தீர்மானப்படி, ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்றும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இனி தனித்தொகுதி ஏற்படவேண்டும். ஆதலால் அதற்கு ஆக தேர்தலை அவர்கள் பஹிஷ்கரிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். எல்லா விஷயத்திலும் திராவிட மக்களுக்கும், ஷெட்யூல் வகுப்பார் என்கின்றவர்களுக்கும் நம் நாட்டைப் பொருத்த வரை வித்தியாசமே இல்லை என்பது தான் நம் கருத்து.

நாம் திராவிட நாடு தனித்துப் பிரிந்து கிடைக்க வேண்டும் என்கிறோம்.

இப்படி ஏற்பட்டால் பம்பாய் முதலியமாகாணங்கள் நமக்கு சம்மந்தமில்லாததாக ஆகிவிடும். அப்போது டாக்டர் அம்பேத்கார், பெரியார் ராஜபோஜ் முதலியவர்கள் தயவும் தொண்டும் நமக்கு இல்லாமல் போய்விடலாம். ஆதலால் இங்குள்ள ஷெடியூல் வகுப்பாரில் சிலர்கூட திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டியதில்லை என்று சொல்லும்படியாகக்கூட ஏற்பட்டுவிடுமோ என்று பயம் தோன்றுகிறது.

ஆகவே ஷெடியூல் வகுப்பார்கள் இந்துக்கள் அல்ல என்பதிலும், திராவிட நாடு தனி நாடு ஆக வேண்டும் என்பதிலும், ஷெடியூல் வகுப்பாருக்குள்ளாகவே அபிப்பிராயப் பேதம் கற்பிக்கப்பட்டாலும் படலாம். அதோடுதேர்தலைப் பஹிஷ்கரிக்கவேண்டுமென்பதிலும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஏனெனில் இத்தேர்தலில் வெற்றிபெற்றால் அந்த வகுப்பில் ஒன்றுக்கு குறையாத மந்திரி பதவி அவசியம் வரும், காரியதரிசி பதவியும் வரும். அதை விட்டுவிட சம்மதிப்பது சுலபத்தில் எதிர்பார்க்க முடியாத காரியமாகும் என்றாலும் தேர்தலில் ஷெடியூல் வகுப்பார்கள் கலந்துகொள்ளாமல் இருப்பது நல்ல பலனைத் தருமென்றே கருதுகிறோம்.

காங்கரசுக்கும் ஷெடியூல் வகுப்புத் தலைவர்களுக்கும், மாகாணத் தேர்தலில் ஏதோ ராஜி ஏற்படப் போகிறது என்று சில இடங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. ஆகவே பொறுத்து இருந்து ஒரு முடிவுக்கு வருவது நலம்.

---

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள் ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

---

"ஆரியர் திராவிடரைக் கொன்று" வெற்றிபெற்ற நாளாகிய

## தீபாவளியை

கொண்டாடி ஈனத்தன்மையைக் காட்டிக்கொள்ளாதீர்கள்.

---

சேலம் அம்மாபேட்டை

## திராவிடர் கழக ஆண்டு விழா

4-11-45 தேதி ஞாயிற்றுக்கிழமை காலையும் மாலையும் சேலம் அம்மாபேட்டை திராவிடர் கழகத்தின் 7வது ஆண்டுவிழா பெரியார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஜனார்த்தனம், கருணாநிதி, சம்பத்து முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

V. R. நாராயணன்,
S. வரதராஜு,
செயலாளர்கள்

---

## கருப்புச் சட்டைப் படை

கருப்புச் சட்டைப் படைக்கு மனுப்போடுகிறவர்களுக்கு மனுப் பாரம் இங்கு அச்சடித்து வைக்கப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் ஒரு ரிப்ளைக் கார்டின் முகப்பில் தங்கள் விலாசத்தையும் தங்களுக்கு வேண்டிய பாரங்களின் எண்ணிக்கையையும் குறித்து, இணைத்துள்ள ரிப்ளைக் கார்டில் விலாசம் எழுதாமல் இங்கு அனுப்பினால் வேண்டிய பாரங்களைப் புக் போஸ்டில் அனுப்பிக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- புக் போஸ்டுக்கு 0-0-9 ஸ்டாம்புக்கு ஆகத்தான் ரிப்ளைக் கார்டு அனுப்பும்படி கேட்கிறோம்.

சட்டைகள் தயாராகின்றன. விலை பின்னால் தெரிவிக்கப்படும்.

---

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ்கட்சிக்கு)

27-10-45 வரை சேர்ந்துள்ள அங்கத்தினர் 34194 பேர்.
சந்தா வரவு ரூ. 3405-0-0

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பதவி விட்டனர்!

(6) திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க அம்மாபேட்டை (சேலம்) திராவிடர் கழகப் பொருளாளர் தோழர் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் தமக்கிருந்த கௌரவ மாஜிஸ்டிரேட் பதவியை 18-10-45-ல் ராஜிநாமாச் செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறார்.

(7) திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க பட்டுக்கோட்டை திராவிடர் கழகத் தோழர் எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள் தாம் இதுகாறும் வகித்துவந்த கௌரவ மாஜிஸ்டிரேட் பதவியையும், டிவிஷனல் யுத்தக் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் 17-10-45-ல் ராஜிநாமாச் செய்துவிட்ட செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறார்.

(8) திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தமது நியமனப் பதவிகளான டிவிஷனல் யுத்தக் கமிட்டி உறுப்பினர், கும்பகோணம் தாலுக்கா சிப்பாய்க் கமிட்டி உறுப்பினர் ஆகிய பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறார்.

(9) திருச்சி தீர்மானத்திற்கிணங்க தண்டராம்பட்டு தோழர் ஆர். சித்தாரெட்டியார் தமது பஞ்சாயத்துப் போர்டு மெம்பர் பதவியையும் ராஜிநாமாச் செய்துவிட்டதோடு, ரெட்டியார் என்ற சாதிக் குறிப்பை விடுத்து பி. சித்தாபதி என்றும் மாற்றிக்கொண்ட செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறார்.

---

### காங்கரசுக்குத் தோல்வி.

கும்பகோணம் நகரசபை 15-வது வார்டு பாணாதுரைக்கு இடைக்கால நகரசபை அங்கத்தினர் தொகுதிக்கு 16-10-45-ந் தேதி காங்கரஸ் சார்பில் தோழர் கே. மகாலிங்கம் பிள்ளையும், அவரை எதிர்த்து தோழர் பி. ஆர். பொன்னுசாமியும் பலமான போட்டியிட்டதில் தோழர் பி.ஆர். பொன்னுசாமி 89 ஓட்டுக்கள் அதிகம் பெற்று வெற்றிபெற்றார்.

## காங்கரசுக்கு-சவால்!

(நடேசனார்)

இன்னும் என்ன செய்யப்போறீங்க—சட்டசபையை
எந்த முறையில் நடத்தப்போறீங்க—சொல்லுங்க நீங்க (இன்)

முன்னம் போட்ட திட்டமெல்லாம் மூலையில்போய் சேர்ந்துபோச்சு
என்ன செய்வ தென்று எண்ணி இரவு பகலாய் ஏங்கலாச்சு (இன்)

சீமைத் துணியை கொளுத்தியாச்சு சிறையில் புகுந்து பார்த்துமாச்சு
ராம ராஜ்ய கனவுமாச்சு ராட்டினத்தை சுழற்றியாச்சு (இன்)

திலகர் நிதியை சேர்த்துமாச்சு தேச பாஷை படித்துமாச்சு
கலகம் பலவும் நடத்தியாச்சு கதரை நெய்து கட்டியாச்சு (இன்)

வட்டமேஜை கூட்டியாச்சு வந்தே மாதரம் பாடியாச்சு
சட்டசபையில் நுழைந்துமாச்சு சங்கடமதில் வளர்ந்துபோச்சு (இன்)

வரி கொடாத இயக்கமாச்சு வக்கீல் தொழிலை விடுத்துமாச்சு
மறியல் செய்து பார்த்துமாச்சு மதுவிலக்கையும் நடத்தியாச்சு (இன்)

உண்ணா விரத மிருந்துமாச்சு உப்புகாய்ச்சி பார்த்துமாச்சு
ஜின்னாவோடும் பேசியாச்சு சிம்லா நாடும் தவறிப்போச்சு (இன்)

ஆகஸ்டு தீர்மானமாச்சு அமெரி துரையை திட்டியாச்சு
வேகமாக வெள்ளையர்களை வெளியில் போகச் சொல்லியாச்சு (இன்)

தந்திக்கம்பியை அறுத்துமாச்சு தண்டவாளம் பெயர்த்துமாச்சு
அந்திய போராட்டமாக பல ஆபீஸ்களை கொளுத்தியாச்சு (இன்)

ஆவல் அத்து மீறிப்போச்சு அழைத்த உடனே ஓடியாச்சு
வேவல் துரையை பார்த்துமாச்சு வெறுங்கையுடனே திரும்பியாச்சு (இன்)

பிரமாதமாக பேசி பெருமை யடைந்த காலம்போச்சு
நிர்மாண திட்டமென்னும் நிலையில் வந்தும் நிற்கலாச்சு (இன்)

---

### இசை வேளாளர் மாநாடுகள்

நவம்பர் 24–25 தேதிகளில் தஞ்சை மாவட்ட இசைவேளாளர் மாநாடும், இசைவேளாள வாலிபர் மாநாடும், மாதர் மாநாடும் சிறப்பாக நடைபெறும் என மாநாட்டு விளம்பர அதிகாரி அறிவிக்கிறார்.

### மதுரையில் தீபாவளி எதிர்ப்பு நாள்

மதுரை மணல் ரோடு மைதானத்தில் 5-10-45-ல் தோழர் எம். எஸ். ராமையா தலைமையில் கூடிய திராவிடப் பிரச்சாரக் குழு ஆரம்ப விழாவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. திருச்சி மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிக்கிறது.

2. தீபாவளி நாளன்று, திராவிட மன்னன் மாண்டதைக் குறித்து துக்கம் காட்டுவதன் மூலம் மாலை 3 மணிக்கு அண்ணாதுரை இலவச வாசகசாலையிலிருந்து கருப்புக்கொடியேந்தி, மெகாபோன் மூலம் தீபாவளி ஒழிப்புக் கோஷங்களுடன் முக்கிய தெருக்கள் வழியே வந்து மாலை 7 மணிக்கு வாசகசாலைக்கெதிரில் தோழர் எம். பட்டணம் தலைமையில் கூட்டம் நடத்துவது.

3. மற்ற ஊர்த் தோழர்களும் தங்களைப் பின்பற்றுமாறும், நாடெங்கும் துக்கம் கொண்டாடுமாறும், வீடெலாம் கருப்புக் கொடி பறக்கவிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## குண்டு வீச்சு!

(விமானி)

### ராமலீலா!

அலகாபாத்தை அடுத்த நைனி என்ற இடத்தில் ராமலீலா உற்சவம் நடந்த காலை ராக்ஷசவேடம் போட்டு ஆடிய ஐவர் உடையில் நெருப்புப் பிடித்து இருவர் இறந்தனர். மூவருக்குப் பலத்த காயம் என்ற செய்தி பத்திரிகைகளில் காணப்படுகிறது. பக்தர்களைச் சோதிக்கும் பரமதயாளன் ராமமூர்த்தி, இருவரை வைகுண்டத்திற்கழைத்து மூவரைக் கடுஞ் சோதனைக் காளாக்கினான் போலும்! ஸ்ரீராமஜெயம்ஜெகத்!

ரோஜா முத்தையா

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்துவிட்டுத் தன்னை இன்னான் என்று அறிமுகப்படுத்தி ஓட்டு கேட்கக்கூட சாவகாசமில்லாமல் மணிக்கு 50, 40 மைல் வேகத்தில் கிராமம் கிராமமாய் பறந்து ஓட்டுக் கேட்கவேண்டியதாகிய அவசர நேரத்தில் இந்த மகா அறிவாளிகள் அறிமுகமில்லாத ஓட்டர்களிடம் என்ன பிரசாரம் செய்ய முடியும் என்று கேட்கிறேன். அன்றியும் அந்த அவசரத்தில் சுயநலம் கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில் செய்யும் பிரசாரம் கவனிக்கப்படுமா, பயன்படுமா என்று கேட்கின்றேன்.

"எப்படி இருந்தாலும் காங்கரசுக்காரனைப் போட்டி இல்லாமல் விடக்கூடாது" என்று சில வீரப் புலிகள் பேசுகிறார்கள். காங்கரசுக்காரனுடன் இவர்கள் என்ன யோக்கியதையைக் கொண்டு போட்டி போடக்கூடும்.

காங்கரஸ்காரன் ஒருவன் தேர்தலுக்கு நின்றால் அதை ஆதரித்து தமிழ்நாட்டில் ஒருநாளில் எண்பது ஆயிரம், லட்சம் பிரதிகளாவது வெளியிடுகின்றன. இந்த வீரப்புலிகளுக்கு அதாவது நிற்கவேண்டும் என்று சொல்லுகிறவர்களின் "கட்சி"க்கு ஒரு ஆயிரம் பிரதிகள் கொண்ட ஒரு தினசரியாவது இருக்கிறதா? வாரப் பத்திரிக்கையாவது இருக்கிறதா? இருந்தாலும் அதில் யாராவது தங்களை பத்திராதிபர்கள் வையாமல் இருப்பதற்கு ஏதோ ஒன்று இரண்டு ரூபாய் பத்திரிகைகாரர்களுக்கு கொடுத்துவிட்டு பத்திரிகையை வாங்கி அப்படியே குப்பைத் தொட்டியில் போட்டுவிடுகிறார்களே தவிர யாராவது பிரித்துப் பார்க்கிறார்களா என்று கேட்கிறேன். காங்கரசுக்கு ஊர்தோறும் தொண்டர்கள், அதுவும் சிறை சென்றுவந்த தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் போட்டி போடும் இவர்களுக்குத் தனித்தனியே நிற்கிற கனவான்களை தவிர கூட செல்வதற்கு உள்ள ஆள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்கிறேன்—ஒருவருடன் போட்டி போடுவதாய் இருந்தால் பணம் செலவு செய்ய வேண்டாமா? கட்டின பணமாவது வாபீசு பெற வேண்டாமா? 500 ரூ. டிபாசிட்டு கட்டிவிட்டு அதை திருப்பி வாங்க 5000 ரூபாயாவது செலவுசெய்ய வேண்டாமா? தோற்கிறவர்களுக்கு இவ்வளவு தைரியமும் செலவுசெய்யும் வீம்பும் இருந்தால் ஜெயிக்கிறவர்களுக்கு எவ்வளவு தைரியமும் வீம்பும் இருக்கும்? ஜெயித்தவனுக்கு எவ்வளவு ரூபாய் செலவானாலும் ஜெயித்தவுடன் அந்த செலவு அவனுக்கு ஒரு பெரிய பெருமையாகவும், பண வருவாயாகவும் ஆகிவிடுகிறது. ஆனால் தோற்றவனுக்கு பணமும் போய் முகம் மூன்றாம் பேஸ்தாகி விடுகிறது. மானமுள்ளவனுக்கு ஒரு வாரமாவது வெளியில் தலைகாட்ட மனம் இல்லாமல் செய்துவிடுகிறது. நாம் பணம் செலவுசெய்து மற்றவனை செலவழிக்கச் செய்து நாம் தோல்வி அடைய ஆசைப்படுவதன் மூலம் மற்றவனுக்கு எதற்கு ஆக வெற்றிப் பிரதாபம் ஏற்படும்படி செய்யவேண்டும். ஜெயிப்போம் என்று நிற்பதானால் அது வேறு விஷயம். நிற்கிறவர் தன் சொந்தக் காசை செலவு செய்வதானாலும் அது வேறு விஷயம். எவனோ மடப்பயல் பணம் கொடுக்கட்டும் "நாம் ஓட்டல்களில்பார் ரூமில் "தேர்தல்பிரசார" டான்ஸ், வாந்தி எடுத்துக்கொண்டு நடத்தலாம்" எவனோ வண்டியில் தூக்கிப்போட்டுக்கொண்டு வந்து நம்மை வீட்டில் விடட்டும் என்றால் இதற்கு ஒரு கட்சி தனது மானத்தை விற்பதா, பணத்தைப் பாழ்படுத்துவதா? என்று கேட்கிறேன்.

ஒரு ஜில்லா போர்டு எலக்ஷனுக்கு 70 ஆயிரம் ரூபாய் முடிப்புக் கட்டி வைத்துக்கொண்டு 40, 50 ஆயிரம் ரூபாயும், 2-குரோஸ் சீமைச்சாராய பாட்டிலும் செலவு செய்தார் ஒரு கனவான். அவ்வளவுதான் படுதோல்வி அடைந்தார். அதனால் பொதுவாழ்வு உலகத்தில் இருந்து மறைந்தே போய்விட்டார். அதனால் கட்சிக்கு ஏற்பட்ட இழிவு இன்னும் தீரவில்லை. அந்த மாதிரி நிலைமைதான் ஏற்படும், பணம் படைத்தவன் தேர்தலுக்கு நின்றாலும் என்று சொல்லுவேன். நான் காங்கரசைப் புகழவில்லை. நம்முடைய பரிதாபகரமான நிலைமையைப் பற்றியே பெரிதும் பேசுகிறேன். ஏன் இவ்வளவு சொல்லுகிறேன் என்றால் இந்தத் தேர்தலுக்குத் திராவிடக் கழகத்தார் (ஜஸ்டிஸ்கட்சியார்) நிற்கக்கூடாது என்றால் எனக்கு அரசியல் ஞானமில்லை என்றும், கட்சியின் பெருமையைக் கெடுத்துவிட்டேன் என்றும், பெரிய தவறு செய்கிறேன் என்றும் சிலர் புறங்கூறித் திரிகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லவே நான் சொல்லுகிறேன்.

உண்மையில் சொல்லுகிறேன் இன்று வீரம் பேசிக்கொண்டு ஊரார் பணத்திலும், தன் பணத்திலும் தேர்தலுக்கு நின்று கொட்டம் அடிக்கும் கனவான்கள் நாளை தோற்ற உடன் (தோற்பது 100க்கு 99 உறுதி) தங்கள் சொந்தக் காரியம் பார்க்கப்போய்விடுவார்கள். சிலர் எதிரிகளுடன் சேர்ந்தாவது தங்கள் பிழைப்பை நடத்த ஆரம்பித்துவிடுவார்கள். இன்று தேர்தலுக்கு நிற்காதீர்கள் என்று சொல்லுகிற நானும் எனது ஜஸ்டிஸ் கட்சியும் தான் இன்று ஜெயிக்கப்போகிறவர்களை ஜெயித்துப் பதவிக்கு வரப்போகிறவர்களை இரண்டில் ஒன்று பார்க்கப் போகிறோம். ஆதலால் நான் பயந்து கொண்டு பேசுவதாகக் கருதிவிடாதீர்கள்.

காங்கரசு ஜெயிப்பது உறுதி பதவியில் அமரப்போவது உறுதி. ஆனால் அப்புறம் அது செய்யப்போவது என்ன? ஜெயிப்பது எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதியாகும் நாளைக்கு அது சந்தி சிரிக்கப்போவதும் சின்னாபின்னப்படப் போவதும். பம்பாய் போல் திராவிட நாடு கொந்தளிக்கப்போவதும் உறுதி உறுதி என்பேன். இன்று காங்கிரசாரிடம் என்ன திட்டம் இருக்கிறது. ஒவ்வொருவரும் "நான் மந்திரி, நான் செகரட்டரி, நான் அதற்குத் தரகன், நான் இதற்குத் தரகன்" என்பது போன்ற மனோராஜ்ஜியம் அல்லாமல் செய்வதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது? "இந்தியா விட்டு வெளியே போ", "ஆசியாவை விட்டு வெளியே போ" என்பதெல்லாம் மடையர்களை ஏமாற்றும் மந்திரம், முட்டாள்களைப் பிடிக்கும் சூழ்ச்சி

அவர்கள் எடுக்கவேண்டிய வரி எவ்வளவோ இருக்கிறது எடுப்பார்களா? முடியுமா? செய்யவேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது செய்வார்களா? செய்ய முடியுமா? முடிந்தால் செய்யட்டுமே நல்லது தானே! முடியாவிட்டால் இடத்தைக் காலி செய்ய வேண்டாமா? இல்லாவிட்டால் மக்களைச்சுட்டுத்தள்ளவேண்டாமா? 1935-ம் வருஷத்து மக்கள் அல்ல, நாளை 1946-ம் வருஷத்தில் இருக்கும்படியான மக்கள் என்பதை மனதிலிருத்திவையுங்கள். வெள்ளைக்காரனுக்கு வெளியே போ என்ற பித்தலாட்டப் பூச்சாண்டியைக் காட்டிக் கருப்புக்காரனுக்குத் தொல்லை கொடுத்துப் பதவி பெரும் "தேச சேவை"க் காரியமல்ல நம்முடைய தேசாபிமானம். நம் தேசாபிமானம் என்கின்ற பேதி மருந்தானது உடலில் (நாட்டுக்குள்-எதிரிகளுக்குள்) இருக்கும் வேண்டாத வஸ்துக்களையும், விஷத்தன்மைகளையும், அஜீரணத்தால் தேங்கி நிற்கும் வஸ்துக்களையும் ஒரே அடியாய் வெளியாக்கிவிடக் கூடியதாகும். அப்பேற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து திராவிட மக்கள் பாய்வதற்கு வேண்டிய வேகத்தையும் பலத்தையும் பெருக்கிக்கொள்ள பதுங்கிப் பழகுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

## அறிவிப்பு

பாபநாசம் தாலுக்காவில் உள்ள கிராமங்கள்—நகரங்களில் திராவிடர் கழக—சுயமரியாதைக் கூட்டங்கள், விழாக்கள் சம்மந்தமாக சொற்பொழிவுக்குத் தோழர்கள் தேவையெனில் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் வசதி செய்யப்படும்.

ஆர். எஸ். முத்துசாமி, செயலாளர்.
திராவிடர் கழகம், ஐயம்பேட்டை.

## மணமகன் தேவை

மணமாகாத 5-வது பாரத்தில் படித்துக்கொண்டிருக்கும் 19 வயதுடைய சோழியவேளாள வகுப்புப் பெண்ணை மணந்துகொள்ள தன்மானப் பற்றுதலும் படிப்பும் உடைய அதே வகுப்பைச் சார்ந்த மணமகன் தேவை.

K. S. S.
C/o கே. கே. நீலமேகம்,
கும்பகோணம்.

## சென்னை சுயமரியாதைச் சங்கம்

### ஜில்லா மாநாடும் சிவாஜி நாடகமும்!

16-10-45-ல் நடந்த கமிட்டிக் கூட்டத்தின்படி டிசம்பர் 15-ந்தேதி குடந்தை தோழர் வி. சின்னதம்பி தலைமையில் சென்னை ஜில்லா சுயமரியாதை மாநாட்டை நடத்துவதென்றும் தளபதி சி. என். ஏ. நடிக்கும் சிவாஜி நாடகத்தை அன்றிரவே நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டு மாநாட்டுக்கு வரவேற்புத் தலைவராகத் தோழர் எம். எஸ். முத்து—பொருட்காப்பாளர் டி. ஆர். ராதா கிருஷ்ணன்—காரியதரிசிகளாக, வித்வான் பு. செல்வராஜ், கே. கோவிந்தசாமி—ஆகியவர்களையும், நாடக கமிட்டிக் காரியதரிசியாக தோழர் என். வி. நடராசனையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## அறிவிப்பு

13-10-45-ந் தேதி முதல் "குடி அரசு" பத்திரிகை விற்பனை செய்ய கொழும்புக்கு சோல் ஏஜண்டாக "குடி அரசு ஸ்டோர்" என்ற விலாசதாரரை நியமித்துள்ளோம். பத்திரிகை அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:- 'குடி அரசு' ஸ்டோர்,
130. மொகாந்திரம் ரோடு,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு.
மானேஜர்.



80-வருட அனுபவம்

1872ஆ௵ முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

# குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னாப்பிரிகா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வடமாகாணங்களிலும் சிறப்புற்றவை.

(CHILDREN'S HEALTH SET)



குழந்தைகள் பாதுகாப்புக்கு
1-செட்டு 7-மருந்துகள்

1. குரு கோரோஜனை மாத்திரை 0-12-0
2. குரு கஸ்தூரி மாத்திரை 0-12-0
3. குரு பாலர் வயிற்றோட்டமருந்து 0-14-0
4. குரு வேப்பெண்ணை தைலம் 1- 4-0
5. குரு K. சோட்டு மருந்து (கக்குவானுக்கு) 2- 0-0
6. குரு ஜீமாகளிம்பு(கரப்பானுக்கு) 1- 0-0
7. குரு பாலர் டானிக் 2-0-0

விபரங்களுக்கு:— (வி. பி. பி. பிரத்தியேகம்)

டாக்டர் எ. மதுரம் சன்ஸ், குரு மருந்து சாலை......
திருச்சினாப்பள்ளி (S. I.)


ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அதும் ஒரு வைத்தியனுடைய வியாதியஸ்தனுக்குக் கஷ்டமானாலும் வைத்தியத் தன்மைக்குப் புகழ் ஆகும். ஆதலால் நம் தொண்டின் பயனாய் ஏற்படும் நலனைத்தான் நாம் சிந்திக்கவேண்டும். அதுதான் நமது இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் உண்மைக் காரணமானதாகும்.

நம்மவர்கள் திருச்சி தாயுமான சுவாமி கோவிலில் ஏதோ சில விக்கிரகங்களைப் பின்னப்படுத்திவிட்டதாகப் பத்திரிக்கையில் பார்த்தேன். ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்று சொல்லிக்கொண்டு யாரோ இதைக் கண்டித்துத் தீர்மானம் செய்ததாகவும் சேதி பார்த்தேன் இது (நடக்கவே இல்லை) உண்மையாய் நடந்திருக்குமானால் எனக்குக் கஷ்டமொன்றுமில்லை. ஆனால் இதைச் செய்யும்படி நான் அல்லது நம் கட்சி (அதாவது யோக்கியமான ஜஸ்டிஸ் கட்சி) யாருக்கும் கட்டளை இடவில்லை. அது இப்போதைய நம் கொள்கையுமல்ல, ஆகையால் அப்படிப்பட்ட காரியத்தில் நம்மவர்கள் சம்மந்தப்படக் கூடாது, பெயர்கூட வெளிவரக்கூடாது.

## தேர்தல்

இப்போது திருச்சி மாநாட்டைப் பற்றியும் நம் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றியும் எங்கும் பேச்சாயிருப்பது சட்டசபைத் தேர்தல் பற்றிய சேதியாகும். சட்டசபைக்கு தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று நாம் தீர்மானித்து இருக்கிறோம். இது நாம் ஜெயிக்க முடியாது என்பதற்கு ஆக அல்ல. அது ஒருபுறம் இருக்கட்டும் நம் நாட்டு சட்டசபை நம் நாட்டு 100க்கு 90 மக்களுக்கும் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. அதாவது நாம் எந்த மக்களுக்கு ஆகப் பாடுபடுகிறோமோ அந்த மக்களுக்கு இந்தசட்டசபைகள் பிரதிநிதி ஸ்தாபனமல்ல.

இந்த நாட்டில் படிப்பில்லாத மக்கள் 100க்கு 90 பேர்களாகும். சட்டசபைத் தேர்தலில் படிப்பில்லாதவர்களுக்கு ஓட்டு இல்லை. இந்த நாட்டில் சொத்தில்லாத பூமி இல்லாத மக்கள், ஏழைகள், ஓலைக் குடிசையில் வாழ்பவர்கள், கூலி மக்கள் 100க்கு 80 பேர்கள் ஆகும். பூமியும் சொத்தும் இல்லாதவர்களுக்கு ஓட்டுக் கிடையாது. இந்த நாட்டில் படிப்பில்லாத, சொத்தில்லாத, பூமியில்லாத, சராசரி வாழ்வில்லாத, கீழ்ஜாதி—தீண்டாத ஜாதி என்னும் மக்களும், மற்றும் தாழ்வாய் மதிக்கப்படும் வண்ணார், நாவிதர், குயவர், மூங்கில் குறவர், வலையர், செம்படவர் எனப்படுபவர் முதலிய குடி மக்கள் என்போரும் சுமார் 100க்கு 50 பேர்களுக்கு மேற்பட்டவர்களாகும். இவர்களுக்கும் ஓட்டுகளோ அல்லது இவர்கள் பிரதிநிதிகள் விரும்படியான தொகுதிகளோ கிடையாது. இந்தப்படியாக ஓட்டு உரிமை இல்லாத மக்களைக் கணக்குப் பார்த்தால் 100க்கு 90 பேர்களுக்கு அதுவும் பாடுபட்டு உழைக்கும்படியான மக்களுக்கும் சமுதாயத்தில் தாழ்த்தி கொடுமைப்படுத்தி இழி நிலையில் வைத்திருக்கும் மக்களுக்கும் ஓட்டுரிமையோ, சட்ட சபையை எட்டிப் பார்க்கும் காட்சி உரிமையோ, சட்டசபையை நினைக்கும் நினைவுரிமையோ இல்லை என்று தானே சொல்ல வேண்டும்.

இன்று உள்ளபடி நாட்டில் நல்வாழ்வும் கல்வியும் முற்போக்கும் மனிதத் தன்மையும் விடுதலையும் எந்த மக்களுக்குத் தேவையோ அந்த மக்களுக்கு ஓட்டுரிமை (பிரதிநிதித்துவம்) இல்லாமல் இந்த மக்களை, எந்த மக்கள் தாழ்த்தி அழுத்தி வைத்து சுரண்டிக்கொண்டு இருக்கின்றார்களோ அந்த மக்களான பார்ப்பனர் படித்தவர் பணக்காரர் ஆகிய கூட்டத்தினருக்கு மாத்திரம் ஓட்டுரிமை இருக்கிற சட்டசபையினால் நாடும் சமுதாயமும் என்ன பலன் அனுபவிக்க முடியும்? பார்ப்பான் மேலும் மேலும் மக்களை முட்டாள்களாக்கி வைத்து ஏமாற்றி உடல் அசையாமல் கொள்ளை அடிக்கவும்,படித்தவன் படியாத மக்களை ஏமாற்றி வஞ்சிக்கவும், பணக்காரன் பணம் சேர்க்கவும் தானே பார்ப்பார்கள். இவர்கள் மூவர்களுடைய சுரண்டுதலும் எடுபட்டால் அல்லாமல் பொது மக்கள் வாழ்வு எப்படி மேம்பட முடியும்.

## சட்டசபையில் என்னசெய்ய முடியும்?

ஆகவே பொது மக்கள் கண்டிப்பாய் இப்படிப்பட்ட தேர்தல்களில் சிறிதும் சம்மதப்படாமல் தங்களுக்கு நல்ல ஓட்டுரிமை வரும் வரை வெறுத்துத் தள்ள வேண்டும். மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு எந்தத் தன்மைகள் கேடு பயக்கக் கூடியவைகளோ அவை மக்கள் உள்ளத்தில் பற்றுக்கொண்டு பதிந்து கிடக்கின்றன. ஜாதி, மதம், கடவுள்கள் தன்மை ஆகியவை மக்களை அடிமைகொள்ளும்படி செய்யப்பட்டிருக்கிறது. இவை இன்று பார்ப்பன சூழ்ச்சியால் சட்டத்தினாலும் சர்க்கார் பாதுகாப்பாலும் இருந்து வருவதாகும். இதை மாற்றுவதற்கு சட்டசபையில் வேலை செய்ய முடியுமா? வேலை செய்யத்தகுந்தவர் இன்று தேர்தலில் வெற்றிபெற முடியுமா? வெற்றி பெற்றாலும் சட்டசபையில் மெஜாரட்டி கிடைக்குமா? கிடைத்தாலும் பார்ப்பனர்கள் சர்க்காரைத் தங்கள் கேன்சில் செய்யும் அதிகாரத்தை உபயோகிக்கச் செய்யாமல் இருப்பார்களா? கேன்சில் செய்யப்படாவிட்டாலும் பாமர மக்களைத் தாண்டிவிடமாட்டார்களா?

## கோவிலில் பொம்மைகள் ஒழிக்கப்படுமா?

உதாரணமாக "கோவில்கள் பொம்மைகளுக்கு ஆக இருக்கக்கூடாது அங்கு கல்வி அளிக்கப்படுவதும்தொழில் நடத்துவதும்தான் நடைபெற வேண்டுமே ஒழிய வஞ்சகர் ஏமாற்றிப் பிழைத்தும் மடையர்கள் ஏமார்ந்து பொருள் இழக்கவுமான பித்தலாட்டக்காரியம் நடக்க இடம்தாக் கூடாது. ஆதலால் அங்குள்ள பொம்மைகளை வெளியாக்கி காட்சிசாலைக்கு கொண்டுபோய் வைக்கவேண்டு"மாய் ஒரு தீர்மானம் நானோ தோழர் அண்ணாதுரையோ கொண்டுவந்தால் அது நிறைவேறுமா என்று கேட்கிறேன்.

அல்லது நாங்களும் தான் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்று சொல்லிக்கொள்ளும் தோழர்கள் சர் ஷண்முகம் செட்டியாரும் சர் பி. டி. ராஜனும் சட்டசபையில் என்பக்கத்தில் இருந்தாலும் அவர்கள் ஓட்டாவது எனக்கு கிடைக்குமா? என்று கேட்கிறேன். தீர்மானத்தைப் பிரேரேபித்து விட்டு வெளியில் வந்தால் பத்திரமாக வீடுபோய் சேரமுடியுமா என்று கேட்கிறேன்.

"ராமாயணமும் பகவத் கீதையும் மத ஆதாரங்களாக கடவுள் தன்மைகள் கொண்டவைகளாக எழுதப்பட்டு மக்கள் மடத்தன்மை அடைந்து ஏமாற்றமுற்று இழிநிலைக்குப் போகக் காரணமாய் இருப்பதால் அவை கொளுத்தப்பட வேண்டும், மக்களால் வெறுக்கப்பட சட்டம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று தீர்மானம் செய்ய முடியுமா?

"ஜாதி பேதம் காட்டி மக்களைப் பிரித்து இழிவுபடுத்திவைக்க ஜாதி வகுப்புக் குறிகள் காரணமாய் இருப்பதால் உச்சிக்குடுமியையும் பூணூலையும் கத்தரித்து நாமத்தையும் விபூதியையும் அழித்துவிட போலீஸ்காரர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது. அதற்கு ஆக ஒவ்வொரு போலீசாருக்கும் ஒரு கத்தரிக்கோலும் ஒரு புருசும் சர்க்கார் அளிக்கிறது" என்று தீர்மானம் கொண்டுவந்தால் நிறைவேறுமா? செய்வதை மக்கள் பொறுப்பார்களா?

தொழிற்சாலைகளிலும் வியாபாரத்திலும் "முதலாளிக்கும் தொழிலாளிக்கும் செலவுபோக லாபத்தில் சரி சரி பங்கு இருக்கவேண்டும்" என்றால் நிறைவேறுமா?

"படிக்காத ஜாதியில் உள்ளமக்கள் படிக்கும்வரை படித்த ஜாதிப் பிள்ளைகளுக்கு படிப்பு நிறுத்திவைக்கப்பட வேண்டும்" என்றால் தீர்மானம் நிறைவேறுமா?

"மடங்களையும் மட சொத்துக்களையும் கைப்பற்றி மடாதிபதிகளை பாதுகாப்பில் வைத்து சாப்பாட்டுக்குக்

ரோஜா முத்தையா

கொடுத்துவிட்டு அவைகளை விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தவேண்டும்" என்றால் நிறைவேறுமா?

இந்த தீர்மானங்களால் நாம் எந்த தனிப்பட்ட மனிதனுடைய சொத்தை யும் பறிமுதல் செய்துவிட வில்லை. யாருக்கும் கைநட்டம் ஏற்படும்படியும் செய்யவில்லை ஏமாற்றுதலும் பித்த லாட்டமும் வஞ்சகமும் இனி நடக்கக் கூடாது என்கின்றோம். இவை நிறை வேறுமா என்று பாருங்கள்.

ஆகவே இந்தப்போலி சட்டசபைப் பைத்தியம் எதற்கு? அதிலும் இந்தக் காரி யங்கள் செய்யாமல் இருப்பது தவறு என்று கருதுகிற ஜஸ்டிஸ்கட்சிக்காரர்களா கிய நமக்கு இந்த சட்டசபைப் பைத்தியம் ஏன்? அதுவும் முடியாது என்று கருது கிற இடத்துக்குப் போக ஏன் ஆசைப்பட வேண்டும் என்று தான் கேட்கின்றேன்.

## எப்போது போகவேண்டும்?

தோழர்களே நாம் எப்போதும் சட்ட சபைக்குப் போகக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. நம்முடைய கொள் கைகளைத் திட்டங்களை நிறைவேற்ற சட்டம் செய்ய சட்டசபைக்குப் போக வேண்டும் என்கின்ற எண்ணத்தை நாம் உண்மையாகவும் நாணயமாகவும் உடைய வர்களானால் நாம் இந்தக் கொள்கை யைத் திட்டத்தைப் பொது மக்களிடம் பரப்பி சம்மதிக்கச் செய்து அவர்களைத் தயார் செய்யவேண்டும். அப்படிப்பட்ட பொது மக்களுக்கு ஓட்டு வரும்படி யாகச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட மக்களை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக் கும்படி செய்யவேண்டும். இந்தப்படி நாம் செய்து முடித்துவிட்டோமா?

இன்று காங்கரஸ் முதலிய மற்றக் கட்சிக்காரர்களின் யோக்கியதை எப்படியோ இருக்கட்டும், பொது உடமைக் கட்சிக்காரர் யோக் கியதை எப்படியோ இருக்கட்டும், ஜஸ் டிஸ் கட்சிக்காரன் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒரு மானமற்ற S. I. L. F. என்ற கூட்டத்தின் யோக்கியதையைச் சற்று சிந் தித்துப்பாருங்கள். ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் கூட்டம் கூட்டினதாகவும் அந்தக் கூட்டத்தில் திருச்சி மலைக் கோட்டை சண்டிகேசுரசாமி கை ஒடிந்து போனதற்கு ஆக மற்றொரு கட்சியாரை அதாவது சீர்முறையான ஜஸ்டிஸ் கட்சி யாளரான நம்மைக் கண்டித் துத் தீர்மானம் செய்ததாகப் பத்திரிக்கையில் விளம்பரம் செய் கிறார்கள். இதன் கருத்தென்னவென் றால் இப்படிச் சொன்னால் பொது மக் களுக்கு ஆத்திரம் வந்து ஜஸ்டிஸ் கட் சிக்கு ஏதாவது கெடுதி செய்வார்கள் என்பதும் நாங்கள் (பொய்யான ஜஸ்டிஸ் கட்சியார்) சட்டசபைக்கு நின்றால் தங் களுக்குச் சில மதிப்பீத்தார்கள் ஓட்டுகளா

வது கிடைக்கும் என்பதுமல்லாமல் வேறு காரணம் என்ன இருக்க முடியும்? இது எவ்வளவு இழிமக்கள் காரியம்?

ஆகவே திராவிட மக்களுக்கு வேண் டிய காரியம் செய்ய இன்றைய சட்ட சபை பயன்படாது என்பதோடு இது திராவிட மக்களின் உண்மையான பிரதி நிதி ஸ்தாபனமாகாது என்றும் சொல்லு கிறேன்.

## ஷெடியூல் மக்கள்

இன்று தாழ்த்தப்பட்ட (ஷெடியூல்) மக்கள் சார்பாய் அம்மக்கள் சட்டசபை தேர்தலுக்கு நிற்பதும்கூட விவேகமும் பொறுப்பும் அற்ற காரியம் என்று சொல்லுவேன். இன்று யாராவது தேர் தலை பஹிஷ்கரிக்க வேண்டுமானால் அது முதலில்தாழ்த்தப்பட்ட (ஷெடியூல்) வகுப்பு மக்களேயாகும். அம்மக்கள் பொறுப்புவாய்ந்த, பொறுப்பை உணர்ந்த தலைவர்களால் நடத்தப்படுபவர்களாய் இருந்தால் தேர்தலைப் பஹிஷ்கரித்து பூனா ஒப்பந்தத்தை உடைத்து இதற்குள் புது தேர்தல் முறையை உண் டாக்கி இருக்கவேண்டும். நண்பர் சிவ ராஜ் தேர்தலில் தோல்வி அடைந்த பின்னும், தேர்தலில் வெற்றி பெற்ற செடியூல் வகுப்பு மெம்பர்கள் எல்லாம் எதிரிகளுக்கு அடிமைப் பட்டவர்களாகவே இருக்கவேண்டியேற் பட்ட பின்னும், இன்றும் நம் எதிரிகளுக் கும், ஷெடியூல் வகுப்பாரின் எதிரி களுக்கும் அவர்கள் நிபந்தனை அற்ற அடி மைகளானால் ஒழிய வெற்றிபெற முடி யாது என்று தெரிந்த பின்னும், அத் தொகுதி தேர்தலுக்கு நிற்பதும், தேர்த லில் கலந்துகொள்ளுவதும் அறிவுடைமை ஆகுமா என்று கேட்கிறேன்.

தேர்தலுக்கு நின்று தோற்ப தில் அதுவும் தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பின்பும் தோல் விக்கு ஆன காரணத்தை சரிப் படுத்திக் கொள்ளாமல் தேர்தலில் நிற்பதில் அறிவுடைமையோ நாணய மோ பொறுப்போ இருக்கிறது என்று எப்படி சொல்லமுடியும்? நின்று நின்று தோற்றுக்கொண் டே வந்தால்தான் ஒரு காலத்தில் வெற்றிபெற முடியும் என்று சில சுயநலமிகளும் சரியான அனுபவ ஞானமற்றவர்களும் சொல்லுகி றார்கள். இதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். தேர்தலை பஹிஷ்கரிப்பது அரசியல் ஞான மல்ல என்கின்றார்கள் சிலர் இதை யும் நான் ஒப்புக்கொள்ளமாட் டேன்.

நின்று நின்று ஜெயித்துக்கொண் டே வந்த காங்கிரஸ் காரார்கள் 15-ந்து வருஷகாலம் தேர்தலில் இருந்து விலகி இருந்து விலகியி

ருந்த காலத்தில் சர்க்கார் தோளின் மேல் கை போட்டுக் கொஞ்சி விளையாடிப் பிச்சை வாங்கிக் கொண்டிராமல் மக்க ளிடம் தேர்தலை வைது இழித்துக் கூறிப் பிரசாரம் செய்துகொண்டும் சர்க்காரை வைது சட்டம் மீறி சர்க்காருக்குத் தொந்திரவு கொடு த்து ஜெயிலுக்குப் போய்க்கொண் டும் இருந்து திடீரென்று சட்ட சபைக்கு நின்று குபீரென்று புயல்காற்று வந்ததுபோல் வெற்றி பெற்று சர்வாதிகாரியாக வந்தார் களே இது எப்படி நடந்தது என்று கேட்கிறேன். நம்நாட்டுக் காங் கரஸ்காரர் மாத்திரமல்லாமல், நாம் யாரைப் பார்த்து இந்த மாதிரி காப்பி அடிக்கிறோமோ அந்த நாட்டாராகிய மேல்நாட்டாரும் கூட இன்று தேர்தலை அடியோடு பஹிஷ்கரிக்கிறார்களே அது ஏன் என்று கேட்கிறேன். உதாரண மாக கிரீஸ்—யோகோசிலாவியா, பல்கேரியா, அர்ஜண்டானா முத லிய ஐரோப்பிய நாட்டு மக்களும் தேர்தலைப் பஹிஷ்கரித்தும், தேர் தலில் நிற்காமலும் ஒதுங்கி நிற் கிறார்கள்.

நிற்க ஒரு சிலர் தாங்கள் தேர் தலில் நிற்பதற்கு சாக்காக, தோற் பதானாலும்கூட தேர்தலில் நின் றால்தான் மக்களுக்கு அரசி யல் ஞானமூட்டவும் பிரசாரம் செய்யவும் முடியும் என்கிறார் கள். இது ஒண்ணாம் நெம்பர் சோம்பேறிகள் பேச்சு என்று தான் சொல்லுவேன். இப்பொழுது இந்தப்படி சொல்லி நிற்கப் போகும் பிரசார சிகாமணிகள் இத்தனை நாளாய் இந்த 8, 9 வருஷ காலமாய் என்ன செய்தார் கள்? எங்கு எங்கு சென்று பிர சாரம் செய்தார்கள்? எதிரிகள் காரியத்தைக் கண்டித்து மறுத்து எந்த ஓட்டரிடம் எந்தக் கிராமத் துக்கு எத்தனை தடவை சென்று பேசினார்கள் என்று கேட்கி றேன். மக்களிடம் போய்ப் பிர சாரம் செய்யவேண்டிய காலத்தில் மக்கள் வெறுப்புக்கு ஆளாகிய சர்க்காரிடம் தொண்டாற்றி பட் டம் பதவி கூலி பெற்றுக்கொண்டு

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை